# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda ( MEETING) | Decision of the City Corporation |
| --- | --- | --- |
| 11.05.2021 | 1. இம்மாநகராட்சியில் பல்வேறு வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மாநகராட்சி சார்பாக ஆஜராகி எதிர் வழக்காடியதற்கு வழக்கு கட்டணம் கோரி திரு என்.தீலிப்குமார், வழக்கறிஞர் அவர்கள் பட்டியல் வழங்கியுள்ளார்கள். எனவே கீழ்கண்டுள்ள விவரப்படி அன்னாரால் கோரப்பட்டுள்ள வழக்கு கட்டணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வழக்கு எண் | மனுதாரர் பெயர் | பிரிவு | தீர்ப்பாணை வரப்பட்ட நாள் | வழக்கு கட்டணம் ரூ. |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | W.P.(MD) No.1145 of 2015 | வி.குமார் | – | 8.2.2019 | 10,000/– |
| 2 | Crl.O.P(MD) No.9115 of 2013 | ஆர்.குருசாமி & சிலர் | சி1 | 5.3.2018 | 11,000/– |
| 3 | W.P.(MD) No.18626 of 2018 | எஸ்.பி.செல்வராஜ் | எப்1 | 29.8.2018 | 10,000/– |
| 4 | W.P.(MD) No.20247 of 2018 | கே.பாலசுப்ரமணியன் | அ1 | – | 10,000/– |
| 5 | W.P.(MD) No.1568 of 2019 | ஆர்.சரோஜா | எப்1 | 4.3.2019 | 10,000/– |
| 6 | W.P.(MD) No.1569 of 2019 | எஸ்.துர்கா பாய் | எப்1 | – | 2,500/– |
| 7 | W.P.(MD) No.1570 of 2019 | எஸ்.ராஜி | எப்1 | – | 2,500/– |
| 8 | W.P.(MD) No.1571 of 2019 | வி.மரகதம் | எப்1 | – | 2,500/– |
| 9 | W.P.(MD) No.6998 of 2019 | எம்.சத்யநாதன் | எச்1 | 30.4.2019 | 10,000/– |
| 10 | W.P.(MD) No.11759 of 2019 | எஸ்.முத்துகுமார் | எப்1 | – | 12,000/– |
| 11 | W.P.(MD) No.12683 of 2019 | ஏ.ஜோசப் சின்ராஜ் | எப்1 | – | 12,000/– |
| 12 | S.A.(MD) No.744 of 2006 | அலெக்ஸ் மேரி | அ1 | – | 12,000/– |
| 13 | W.P.(MD) No.15110 of 2019 | ஜி.பிரபாகரன் | எச்1 | – | 12,000/– |
| 14 | W.P.(MD) No.20080 of 2019 | ஆர்.சங்கர் | எப்1 | – | 12,000/– |
| 15 | W.P.(MD) No.21204 of 2019 | தஞ்சாவூர் மாநகர தலைமை கடை கனி வர்த்தக சங்கம் | அ1 | – | 12,000/– |
| 16 | W.P.(MD) No.23063 of 2019 | ஆர்.சரவணன் | அ1 | – | 12,000/– |
| 17 | Legal Opinion of Smart City Project | – | அ1 | 16.11.2019 | 1,500/– |
| 18 | Reply Notice | – | அ1 | 16.11.2019 | 3,000/– |
| 19 | Caveat No.2391 of 2019 | சீர்மிகு நகரம் | அ1 | 5.12.2019 | 3,000/– |
| 20 | W.P.(MD) No.1312 of 2020 | கே.மூர்த்தி | இ3 | 25.1.2020 | 12,000/– |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>21</td><td>W.P.(MD) No.1230 of 2020</td><td>தஞ்சை அய்யாசாமி பஞ்சாயத்</td><td>அ1</td><td>25.1.2020</td><td>12,000/–</td></tr>
<tr><td>22</td><td>W.P.(MD) No.2111 of 2020</td><td>ஆர்.சேதுராமன்</td><td>எப்1</td><td>6.2.2020</td><td>12,000/–</td></tr>
<tr><td>23</td><td>W.P.(MD) No.2353 of 2020</td><td>எஸ்.லெனின்</td><td>எப்1</td><td>8.2.2020</td><td>12,000/–</td></tr>
<tr><td>24</td><td>W.P.(MD) No.3967 of 2020</td><td>வெங்கடேச மணிவேலன்</td><td>எப்1</td><td>6.3.2020</td><td>12,000/–</td></tr>
<tr><td>25</td><td>W.P.(MD) No.6143 of 2020</td><td>ஆர்.சத்யமூர்த்தி</td><td>இ1</td><td>12.8.2020</td><td>12,000/–</td></tr>
<tr><td>26</td><td>Legal Opinion</td><td>ஆர்.அருணகிரி</td><td>அ1</td><td>12.8.2020</td><td>3,500/–</td></tr>
<tr><td>27</td><td>W.P.(MD) No.1864 of 2021</td><td>ஜெயகாந்த்</td><td>எப்1</td><td>–</td><td>12,000/–</td></tr>
<tr><td>28</td><td>W.P.(MD) No.141 of 2021</td><td>சேவியர் (எ) ராஜசேகரன்</td><td>எப்1</td><td>–</td><td>12,000/–</td></tr>
<tr><td>29</td><td>W.P.(MD) No.3558 of 2021</td><td>அருள்மிகு ஸ்ரீ எல்லையம்மன் கோவில்</td><td>எப்1</td><td>–</td><td>12,000/–</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
மாமன்றம் அனுமதிக்கலாம். (File No.5885/2019/C4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>11.05.2021</td>
<td>2.</td>
<td>திரு டி.ஞானசேகரன், தட்டச்சர் (தபநீ) என்பவர் கணினி வரி வசூல் மையத்தில் பில் போட்ட பணி மேற்கொண்டபோது ரூ.8,41,986/– கையாடல் செய்தது தொடர்பாக Crl.OP (MD) No.9115 of 2013 and M.P.(MD) No.1 of 2013–ல் திரு பி.குருசாமி மற்றும் திரு வி.ராமச்சந்திரன் ஆகியோர்கள் தொடர்ந்த வழக்கில் திரு என்.திலீப்குமார், வழக்கறிஞர் அவர்கள் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்காடியுள்ளதால் வழக்கறிஞர் கட்டணம் ரூ.11,000/– வழங்கிட கோரியுள்ளார். அன்னாருக்கு மேற்படி தொகை வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மாமன்றப் பொருள் அனுமதிக்கலாம்.<br>
2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேல் நடவடிக்கை எடுத்ததை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.13725/2008/சி1)
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>11.05.2021</td>
<td>3.</td>
<td>இம்மாநகராட்சியின் அனைத்து பிரிவுகள் A4 ரீம் தேவைப்படுவதால், தற்போது விலை ஒப்பந்தப்புள்ளி கோர முடியாததால், இம்மாமன்றம் தீர்மான எண்.385, நாள் 29.01.2021–ன்படி ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் அங்கீகரிக்கப்பட்ட தஞ்சை மாவட்ட மாநில அரசு ஊழியர்கள் உபயோகிப்போர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட் நிறுவனத்திற்கு A4 ரீம் 50 ரீம்கள் சப்ளை செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தில் பொருள்கள் வாங்கிட அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.8900/2020/டி1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 11.05.2021 | 4. | இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான 2018–2021 மூன்றாண்டு குத்தகை உரிமத்திற்கான மூன்றாமாண்டு உரிமத்தொகை ரூ.17,86,622/– சம்பந்தப்பட்ட உரிமதாரர் திரு பு.நீலமேகராஜன் என்பவரால் செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்துவந்த நிலையில் மேற்படி தொகையினை செலுத்திட அன்னாருக்கு கால அவகாசங்கள் வழங்கி உரிய முறையில் அறிவிப்புகள் அனுப்பப்பட்டும், தொகை செலுத்தப்படாததால் மாநகராட்சி நிர்வாக அலுவலர்களால் மாநகராட்சி பணியாளர்களைக் கொண்டு கடந்த 02.03.2021 காலை 10.00 மணி முதல் மேற்கண்ட இனத்தினை கையகப்படுத்தி துறை ரீதியான வசூல் பணி 31.03.2021 இரவு 12.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது.<br>தற்போது மேற்கண்ட இனத்திற்கான மூன்றாம் ஆண்டு குத்தகை உரிம தொகை ரூ.17,86,622/– வசூல் செய்திட தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குத்தகை உரிமதாரர் திரு பு.நீலமேகராஜன் என்பவர் மீது வழக்கு தொடரவும், மேற்படி வழக்கிற்கான நீதிமன்ற கட்டணம் ரூ.53,600/–, வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/– மற்றும் வழக்கு தொடர்பான இதர கட்டணங்கள் ரூ.3000/– ஆக கூடுதல் ரூ.71,600/–ஐ மாநகராட்சி வழக்கறிஞர் திரு அய்யா வெற்றிச்செல்வன் அவர்களுக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.71,600/–க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். பணிக்கான செலவினை 2021–22க்கான வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கப்பட்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.15649/2017/எம்சிஏ5) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 11.05.2021 | 5. | இம்மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பம்ப் ஆப்ரேட்டர்கள் பணிக்கு பணியாளர்களை சப்ளை செய்த வகையில் ஒப்பந்ததாரர் M/s. MSG Infra நிறுவனம் ஒப்பந்த பணியாளர்களுக்கு EPF, ESI மற்றும் ஊதிய தொகை வழங்கக்கோரி திரு எம்.சிவக்குமார் முதல் திரு ஏ.அண்ணாதுரை வரை உள்ள 24 நபர்கள் மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் W.P.No.21391 of 2018 முதல் W.P.No.21414 of 2019 முடிய வழக்கு தொடரப்பட்டு இம்மாநகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர் என்பவர் ஆஜராகி உள்ளார். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இவ்வழக்கில் மாநகராட்சியின் சார்பில் எதிர் வாதுரை தயார் செய்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் போன்ற செலவினத் தொகை ரூ.12,000/– வழங்கக்கோரி திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர் தனது 05.01.2019ம் தேதிய கடிதத்தில் பட்டியல் வழங்கியுள்ளார். மேற்கண்ட கட்டணத்தை அன்னாருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணத்தை பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.7514/2019/எம்சிஇ1) | |
| 11.05.2021 | 6. | இம்மாநகராட்சியில் 14வது மத்திய நிதிக்குழு மான்யம் பரிந்துரையின்படி Package-1ன் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட சோழன் நகர், TT நகர் இணைப்பு சாலைகள் அமைக்க இம்மாமன்ற தீர்மான எண்.473, நாள் 27.02.2020ன்படி உத்தேசிக்கப்பட்டது. மேற்படி சாலைகளில் புதைவடிகால் தொட்டி கட்டப்பட்டு இதுநாள் வரை பணிகள் முடிவடையவில்லை. மேற்படி சாலைப்பணியினை முடித்து உடன் பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று அரசுக்கு அனுப்ப வேண்டிய நிலையை கருத்தில் கொண்டும், செயற்பொறியாளரின் அறிவுரையின்படியும், மாற்று ஏற்பாடாக வெண்ணாறு பம்பிங் ஸ்டேஷன் சாலை, குதிரைக்கட்டித்தெரு, குறிச்சி சுப்பிரமணியகோவில் தெருவின் ஒரு பகுதி சாலை ஆகிய பகுதிகளில் சாலை அமைக்கப்பட்டது. எனவே மேற்கண்ட மாற்று ஏற்பாடாக சாலைகள் அமைக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொண்டதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.172/2020/எம்சிஇ1) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 11.05.2021 | 7. | தஞ்சாவூர் மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டப்பணிகளின் (NULM) 2021–22ன் கீழ் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நோயாளிகள் உடனிருப்போர் தங்குமிடம் கட்டும் பணிக்கு 7வது திட்ட அனுமதி குழுக்கூட்டம், நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நாள் 2.2.2021–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1473/202/DO2, நாள் 05.05.2021ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறைகள் ந.க.எண்.38038/2013/UPA21, நாள் 25.2.2021–ன்படி மேற்கண்ட பணிக்கு ரூ.150.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்றி ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே இராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நோயாளிகள் உடனிருப்போர் தங்குமிடம் கட்டும் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு:<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டப்பணிகளின் (NULM) 2021–22ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3775/2021/எம்சிஇ1) | |
| 11.05.2021 | 8. தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி A.நாகேஸ்வரி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.6503/2021 மற்றும் 6515/2021 வழக்கு தொடர்ந்து நீதிமன்ற தீர்ப்பு வந்துள்ளது. இதன் மீது நடவடிக்கை தொடர சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு பி.சீனிவாசன் அவர்கள் ஆஜராக செய்வதற்கும், செலவிற்கும் ஏற்க மாமன்ற அனுமதி வேண்டுப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். (ந.க.எண்.5126/2021/எம்சிஎப்5) | அனுமதிக்கப்பட்டது |

நாள் : 17.05.2021
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.

# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda ( MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 27.05.2021 | 9. இம்மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல்–2021 மாதங்களின் நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.7826/2019/சி5) | பதிவு செய்யப்பட்டது |
| 27.05.2021 | 10. தமிழ்நாடு அரசிதழ் எண்.123, நாள் 25.02.2021–ல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை எண்.XIII–ல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலத்தை 30.06.2021 வரை நீட்டித்து உரிய திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.10700/2016/சி1) | பதிவு செய்யப்பட்டது |
| 27.05.2021 | 11. இம்மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண்.5, பிளாக் 8, சர்வே எண்.82 மற்றும் 455–ல் தற்போதைய குத்தகை இனத்தின் கீழ் உள்ள காவேரி லாட்ஜ் (மாசானிக் லாட்ஜ்) மற்றும் ஜூபிடர் திரையரங்கம் ஆகியவற்றிற்கு தற்போதைய கட்டிடத்தின் மதிப்பு வழங்குவதற்கு அரசாணை எண்.181/PWD(G2), நாள் 16.02.2003-ன்படி அரசுக்கு நூற்று வீதக்கட்டணமாக காவேரி லாட்ஜ் (மாசானிக் லாட்ஜ்) கட்டிடத்திற்கு ரூ.33,465/– மற்றும் ஜூபிடர் திரையரங்க கட்டிடத்திற்கு ரூ.1,05,740/– ஆக கூடுதல் தொகை ரூ.1,39,205/– செலுத்தப்பட வேண்டும் என செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க&ப) கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் எண்.99எம்/கோ/2021/(வபி)இவஅ–1, நாள் 29.03.2021–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.1,39,205/–ஐ செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க&ப) கோட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு செலுத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட கட்டணத்திற்கான செலவினம் ரூ.1,39,205/–க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். செலவினை 2021–22 வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

2) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி கட்டணத்தொகை ரூ.1,39,205/—ஐ செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க&ப) கோட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு செலுத்தியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6441/2011/எம்சிஏ5)

---

27.05.2021

**12.** தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021, 06.04.2021 அன்று நடைபெறுவதை ஒட்டி அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கு 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட எண்ணிக்கை Plastic Bins சப்ளை செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | No of Bins | Rate per Rs. | Total Estimate Rs. |
|---|---|---|---|---|
| 1 | KRISHA PLASTCS, NO.3318, SUKKAN THIDAL BIG ADHIDRAVIDAR STREET, KARANTHAI, THANJAVUR -1 | 280 | 395 | 110600 |
| 2 | RAJALAKSHMI PLASTICS, 15, KURUCHI NEW STREET, EAST GATE, THANJAVUR | 280 | 408 | 114240 |
| 3 | GOLDEN PLASTICS, NO.2319 OLD NELLUMANDI STREET, SUNNAMBUKALAVAI ROAD, KARANTHAI, THANJAVUR - 2 | 280 | 405 | 113400 |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள KRISHA PLASTCS, NO.3318, SUKKANTHIDAL BIG ADHIDRAVIDAR STREET, KARANTHAI, THANJAVUR நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி பணி தேர்தல் பணி என்பதால் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6091/2021/ஜி1, நாள் 09.03.2021—ன்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கலாம்.
3) மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,10,600/—ஐ மாமன்றம் ஏற்கலாம்.
4) மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டு பின்னர் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து மான்ய தொகை பெறப்பட்டதும் ஈடு செய்யலாம்.

(ந.க.எண்.3600/2021/அ10)

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

<table>
<tr>
<td>27.05.2021</td>
<td>13.</td>
<td>
தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021, 06.04.2021 அன்று நடைபெறுவதை ஒட்டி அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கும் கொரோனா தடுப்பு பொருட்களை அனுப்பிட தேவையான அட்டை பெட்டி (Packing Box) சப்ளை செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>No of Bins</th><th>Rate per Rs.</th><th>Total Estimate Rs.</th></tr>
<tr><td>1</td><td>LAKSHMI CARTON, Manufactures of Corrugated Rolls, Boards, Boxes & Export Cartons, T.S.No.6/2-B2 & 7/1-B2 (Old Cholan Rice Mill) Mothirappa Chavady, Thanjavur</td><td>280</td><td>123</td><td>34440</td></tr>
<tr><td>2</td><td>Srinithi Stationaries & Printers, MIG 612 Neithal (Opp. Sarafoji College Hostel) New Housing Unit, Thanjavur</td><td>280</td><td>128</td><td>35840</td></tr>
<tr><td>3</td><td>Monisha Computers, 2200 Manojiappa Veethi, Near TKR Middle School, Thanjavur</td><td>280</td><td>127</td><td>35560</td></tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள LAKSHMI CARTON, Manufactures of Corrugated Rolls, Boards, Boxes & Export Cartons, T.S.No.6/2-B & 7/1-B2 (Old Cholan Rice Mill), Mothirappa Chavady, Thanjavur நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்படி பணி தேர்தல் பணி என்பதால் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6091/2021/ஜி1, நாள் 09.03.2021–ன்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.34,440/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.<br>
4) மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டு பின்னர் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து மான்ய தொகை பெறப்பட்டதும் ஈடு செய்யலாம்.<br>
(ந.க.எண்.3600/2021/அ10)
</td>
<td>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.05.2021</td>
<td>14.</td>
<td>தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021, 06.04.2021 அன்று நடைபெறுவதை ஒட்டி 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட இரண்டு எண்ணிக்கை Selfie Booth அமைத்திட விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | No of Selfie Booth | Rate per Rs. | Total Estimate Rs. |
|---|---|---|---|---|
| 1 | SAHARA ENTERPRISES, 2888/2/18, NEAR PWD OFFICE, VILAR ROAD, SANTHAPILLAI GATE, THANJAVUR. | 2 | 9440 | 18880 |
| 2 | SAGO FLEX, 78/71, GANDHIJI ROAD, AATHUPALAM, THANJAVUR | 2 | 10502 | 21004 |
| 3 | P COLOURS, 73C, G.A.CANAL ROAD, THANJAVUR | 2 | 10030 | 20060 |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள SAHARA ENTERPRISES, 2888/2/18, NEAR PWD OFFICE, VILAR ROAD, SANTHAPILLAI GATE, THANJAVUR நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி பணி தேர்தல் பணி என்பதால் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6091/2021/ஜி1, நாள் 09.03.2021–ன்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கலாம்.
3) மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.19,000/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.
4) மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டு பின்னர் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து மான்ய தொகை பெறப்பட்டதும் ஈடு செய்யலாம்.

(ந.க.எண்.3600/2021/அ10)

27.05.2021 | 15.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021, 06.04.2021 அன்று நடைபெறுவதை ஒட்டி 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 100 எண்ணிக்கை சுவர் விளம்பரம் (Wall Painting) செய்திட மேற்படி பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | No of Advertisement | Rate per Rs. | Total Estimate Rs. |
|---|---|---|---|---|
| 1 | THIRU R.ARULYOGORAJ, PROFESSIONAL ARTIST & DESIGNER, ALAKUDI | 100 | 300 | 30000 |
| 2 | THIRU G.AJAY PRATHAP, ARTIST, UMAIYAL ARCORD, THANJAVUR DT. | 100 | 350 | 35000 |
| 3 | THIRU MARTIN, ARTIST, THIRUVETHUGUDI | 100 | 325 | 32500 |

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள THIRU R.ARULYOGARAJ, PROFESSIONAL ARTIST & DESIGNER, ALAKUDI நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>2) மேற்படி பணி தேர்தல் பணி என்பதால் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6091/2021/ஜி1, நாள் 09.03.2021–ன்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கலாம்.<br>3) மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.<br>4) மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டு பின்னர் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து மான்ய தொகை பெறப்பட்டதும் ஈடு செய்யலாம்.<br>(ந.க.எண்.3600/2021/அ10) | |
| 27.05.2021 | 16. | இம்மாநகராட்சிக்கு 2021–22ம் ஆண்டிற்கு தேவையான வகையில் எழுது பொருள்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் போன்ற இதர பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு லட்சத்திற்கு) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5999/2021/டி1) | அனுமதிக்கப்பட்டது |
| 27.05.2021 | 17. | இம்மாநகராட்சிக்கு தேவையான வகையில் அலுவலக உபயோகத்திற்கு 2021–22ம் நடப்பாண்டிற்கு அனைத்து பிரிவுகளுக்கு இயங்கி வரும் கணினிகளுக்கு Tonner தேவைப்படுவதால் New Tonner மற்றும் Refilling செய்து கொள்ளவும் உத்தேச செலவினமாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சத்திற்கு) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5998/2021/டி1) | அனுமதிக்கப்பட்டது |
| 27.05.2021 | 18. | இம்மாநகராட்சியில் வெண்ணாறு, திருமானூர் மற்றும் கணபதி நகர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்த வகையில் ஒப்பந்ததாரர் திரு J.சீனிவாசன் என்பவரால் வழக்கு எண். W.P (MD) No.12785/2018-ல் வழக்கு தொடரப்பட்டு இம்மாநகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வரப்பெற்றது. மேற்படி வழக்கில் Appeal WA 762 of 2021 Case filing செய்யப்பட்டு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் இம்மாநகராட்சி சார்பாக திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர் என்பவர் ஆஜராகி உள்ளார். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இவ்வழக்கில் மாநகராட்சியின் சார்பில் எதிர் வாதுரை தயார் செய்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் போன்ற செலவினத் தொகை ரூ.20,000/– வழங்கக்கோரி திரு N.தீலிப்குமார், வழக்கறிஞர் தனது 01.05.2021ம் தேதிய கடிதத்தில் பட்டியல் வழங்கியுள்ளார். மேற்கண்ட கட்டணத்தை அன்னாருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணத்தை பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1624/2016/எம்சிஇ1) | |
| 27.05.2021 | 19. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு இடைவெளி நிரப்பும் திட்டம் 2016–17ன் கீழ் மதிப்பீடு ரூ.650.00/– இலட்சத்திற்கு (திட்ட நிதி ரூ.415.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பங்களிப்புத்தொகை ரூ.235.00/–) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள வரைபடங்கள், மதிப்பீடுகள், தொழில்நுட்ப அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான ஆவணங்கள் தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் மாமன்ற தீர்மான எண். 343, நாள் 19.09.2016–ன்படி Reform design and planning cell Pvt Ltd, Ahamedabad-380006 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.11,50,000/– ஏற்கப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலை உத்தரவில் GST தொகை பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் Reform design and planning cell Pvt Ltd, Ahamedabad-380006 நிறுவனம் கோரிய ஒப்பந்தப்புள்ளியில் தொகை ரூ.11,50,000/– GST நீங்கலாக என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆணையாளர் அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்த அறிக்கை அளவு புத்தகம் (144/2015–16 பக்கம் எண்.3ல் withheld என குறியிடப்பட்டுள்ளது) மற்றும் Auditor திரு R.இரவிச்சந்திரன் கருத்துரையின்படி சேவைக்கட்டணம் 15% தொகை ரூ.1,72,500/– Reform design and planning cell Pvt Ltd, Ahamedabad-380006 நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.8696/2016/எம்சிஇ1) | அனுமதிக்கப்பட்டது |
| 27.05.2021 | 20. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு பணியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளுக்கு தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் தட்டச்சு பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு 04.03.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தினமணி நாளிதழில் 18.02.2021 அன்று | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | விளம்பர அறிவிப்பு செய்யப்பட்டதற்கான தொகை ரூ.9761/—ஐ (ரூபாய் ஒன்பதாயிரத்தி எழுநூற்றி அறுபத்தி ஒன்று மட்டும்) வழங்கக்கோரி M/s.adwave advertising Private Ltd, சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1984/2020/எம்சிஇ1) | |
| 27.05.2021 | 21. | தஞ்சாவூர் மாநகராட்சி பாதாள சாக்கடை கேட்பு நடப்பு மற்றும் நிலுவைத்தொகையினை வசூல் செய்திட இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.11212/2020/சி1, நாள் 14.12.2020 உத்தரவின்படி பாதாள சாக்கடை வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நிலுவையில் உள்ள பாதாள சாக்கடை கட்டணம் வசூல் செய்திட கேட்பு பட்டியல் இணைப்புதாரரின் முகவரிக்கு அனுப்புவதற்கு இந்திய தபால்துறை அலுவலகத்தில் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே கேட்பு விபரங்களை தபால்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு தபால் அனுப்புவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,50,000/— (ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/—க்கு (ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.12344/2020/எம்சிஇ2) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27.05.2021 | 22. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் —Vக்கு உட்பட்ட வார்டு எண்கள்.41 முதல் 51 வரையிலான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை குழாய்களில் அவ்வப்போது அடைப்புகள் ஏற்பட்டு போக்குவரத்திற்கும், பொது மக்கள் செல்வதற்கும் இடையூறாக உள்ளது. மேற்படி சேதமடைந்த பாதாள சாக்கடை குழாய்களை மாற்றி சீரமைத்து பராமரிக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9,90,000/—ஐ (ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/—க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொன்னூராயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2021—2022 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6160/2021/எம்சிஇ2) | |
| 27.05.2021 | 23. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் — V வார்டு எண்.41 முதல் 51 வரையிலான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கு குழிகளில் சில பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கு குழிகள் சேதமடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேற்படி சேதமடைந்துள்ள புதைவடிகால் ஆள் இறங்கு குழிகளை உயர்த்தி கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/—ஐ (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கான தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/—க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2021—2022 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6162/2021/எம்சிஇ2) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27.05.2021 | 24. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளிலும் Community Drinking Water Supply Units – PPP Mode முறையில் பொருத்தி தரும் பணிக்கு Expression of Interest (EOI) எனும் வகையில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான பத்திரிக்கை விளம்பர கட்டணம் ரூ.90,562/—ஐ வழங்கிடுமாறு M/s. Bright Advertising, Chennai எனும் நிறுவனம் பட்டியல் எண்.6125(A) நாள் 11.01.2019ன்படி கோரி உள்ளது.<br>மேற்குறிப்பிட்ட பணிக்கான விளம்பர கட்டணம் ரூ.90,562/—ஐ வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான விளம்பர கட்டணம் ரூ.90,562/—ஐ (ரூபாய் தொன்னூராயிரத்து ஐந்நூற்றி அறுபத்தி இரண்டு மட்டும்) 2021—2022க்கான பொது நிதியில் சேர்த்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.12950/2019/எம்சிஇ4) | |
| 27.05.2021 | 25. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 டவுன் கரம்பை பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி பள்ளி கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் இக்கட்டிடமானது பள்ளி கட்டிடம் என்பதால், குழந்தைகள் நலன் கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதனை சீரமைக்க அவசியமாக உள்ளதினை கருத்தில்கொண்டு மேற்படி அங்கன்வாடி கட்டிடங்களை சீரமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுதொகை ரூ.3,50,000/—ஐ (ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/—க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2021—2022 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6493/2021/எம்சிஇ4) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27.05.2021 | 26. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 முதல் 34 வரை மற்றும் வார்டு எண்.43 முதல் 47 வரையிலான வார்டுகளில் உள்ள 27 எண்ணிக்கையிலான சிறு மின்விசை பம்புகள் (Mini Power Pump) மற்றும் 54 எண்ணிக்கையிலான (Power Pump) ஆகியவற்றின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்யும் பொருட்டும், குடிநீர் பணியின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டும், மோட்டார் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/— இலட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி 18.11.2020—ல் பெறப்பட்டு இப்பணிக்கு 09.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு V.சுதாகர் ஒப்பந்ததாரர் என்பவருக்கு இவ்வலுவலக வேலை உத்தரவு ந.க.எண்.11192/2020/எம்சிஇ4, நாள் 23.01.2020ன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கு தஞ்சாவூர் மாமன்ற தீர்மான எண்.359, நாள் 31.12.2020 மற்றும் மாமன்ற தீர்மான எண்.391, நாள் 29.01.2021—ன்படி மாமன்றத்தின் | பதிவு செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதியும் பெறப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/—க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீட்டு தொகை முடிவடையும் நிலையில் உள்ளதாலும், சட்டமன்ற தேர்தல் அறிவிக்க உள்ள நிலையில் தேர்தல் நன்னடத்தை விதிகளின் காரணமாக தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், இப்பணிக்காக தன்னால் வழங்கப்பட்டுள்ள பழைய விலைப்புள்ளியின் அடிப்படையிலேயே இப்பணியை தொடர்ந்து மேற்கொள்வதாக இப்பணிக்கான ஒப்பந்ததாரர் திரு V.சுதாகர் என்பவர் தனது 26.01.2021 தேதிய கடிதத்தில் ஒப்புதல் அளித்துள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொள்ள உரிய கால அவகாசம் இல்லாததை கருத்தில் கொண்டும், பொது மக்களின் நலன் கருதியும் தொடர்ந்து இப்பணியை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00/— இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அனுமதியும், மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதியின் பெயரில் திரு V.சுதாகர், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2) குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்தினை குடிநீர் நிதியில் சேர்த்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) திரு V.சுதாகர், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களின் 26.02.2021ஆம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.11192/2020/எம்சிஇ4) | |
| **27.05.2021** | **27.** | தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பணிக்கு தடையில்லா மின்சாரம் தேவைப்படுவதால் இம்மாநகராட்சிக்கு சொந்தமான Genset-ஐ மின்தடை நேரங்களில் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக, இம்மாநகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தில் உள்ள 62.5 KVA Genset-ஐ வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பொருத்தி தருமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.<br>தற்போது தமிழக சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருப்பதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள போதிய அவகாசம் இல்லாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு இப்பணியின் அவசர அவசியம் கருதி 1920—ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி 01.03.2021 அன்று பெறப்பட்டுள்ளது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
இதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட 62.5 KVA Genset-ல் பழுதடைந்துள்ள இரண்டு எண்ணிக்கையிலான 100 AH Batteryயினை மாற்றி புதிதாக இரண்டு எண்ணிகையிலான 100 AH Batteryயினை மாற்றி தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பொருத்தி தரும் பணிக்கு (Crane Charges, Transport Charges மற்றும் Labour Charges) 06.03.2021 அன்றைய தேதியில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>M/s. Neelam Electricals, Melattur</td><td>42,244/- (Including 18% GST)</td></tr>
<tr><td>2</td><td>M/s. U.S.Electricals, Chennai</td><td>44,580/- (Including 18% GST)</td></tr>
<tr><td>3</td><td>M/s. SP Electricals, Orathanadu</td><td>45,784/- (Including 18% GST)</td></tr>
</table>
இவற்றில் குறைவான விலைப்புள்ளி தொகை ரூ.42,244/– (ரூபாய் நாற்பத்தி இரண்டாயிரத்தி இருநூற்றி நாற்பத்தி நான்கு மட்டும் (Including 18% GST) என்ற அளவில் விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Neelam Electricals, Melattur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணிகள் மேற்கொள்ள அனுமதித்ததையும், இப்பணிக்கான உத்தேச செலவினத்தொகை ரூ.42,244/–க்கு (ரூபாய் நாற்பத்தி இரண்டாயிரத்தி இருநூற்றி நாற்பத்தி நான்கு மட்டும் (Including 18% GST) அனுமதி வழங்கியதையும் மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
இப்பணியின் அவசர அவசியம் கருதி, தமிழக சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருப்பதை கருத்தில் கொண்டு மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி, குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கியுள்ள M/s. Neelam Electricals, Melattur என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.3964/2021/எம்சிஇ4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.05.2021</td>
<td>28.</td>
<td>
தஞ்சாவூர் மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை திறம்பட செயல்படுத்தும் விதமாக ஒவ்வொரு துப்புரவு கோட்டத்திலும் ஒரு நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் (Micro Compost Center) அமைக்க திட்டமிடப்பட்டு அவ்வாறே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்த துப்புரவு கோட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை அந்த கோட்டத்திற்கு என ஒதுக்கப்படும் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையங்களுக்கு வாகனம் மூலம் கொண்டு செல்வதற்கு ஏதுவாக துப்புரவு கோட்டங்களுக்கு இடையேயான எல்லை வரைபடம் (Ward Boundary Map) தயார் செய்து கொடுக்கலாம். இதன் மூலம் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையங்களில் செயல்பாடு சீரானதாகவும், முறைப்படுத்தப்படவும் வாய்ப்புகள் உள்ளது. எனவே, தஞ்சாவூர் மாநகராட்சியில் உள்ள 14 துப்புரவு கோட்டங்களுக்கு இடையேயான எல்லை வரைபடம் (Ward Boundary Map) தயார் செய்து கொடுக்கும் பணிக்கு 09.02.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>M/s. Shri Hayagrivaas Construction, Thanjavur</td><td>28,000/-</td></tr>
<tr><td>2</td><td>Er. K.Karthik (Karthick Builders), Thanjavur</td><td>31,500/-</td></tr>
<tr><td>3</td><td>M/s. RC Construction, Thanjavur</td><td>35,000/-</td></tr>
</table>
இவற்றில் குறைவான தொகை ரூ.28,000/– என்ற விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Shri Hayagrives Construction, Thanjavur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணிகள் மேற்கொள்ள அனுமதித்ததையும், இதற்காக உத்தேச செலவினத்தொகை ரூ.28,000/–ஐ (ரூபாய் இருபத்தி எட்டாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.28,000/–க்கு (ஒரு இருபத்தி எட்டாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து சீர்மிகு நகரத் திட்ட நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி குறைந்த விலைப்புள்ளி வழஙகியுள்ள M/s. Shri Hayagrivaas Construction, Thanjavur என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1194/2021/எம்சிஇ4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.05.2021</td>
<td>29.</td>
<td>தமிழ்நாடு மாநில சட்டப்பேரவை தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 6ம் தேதி 2021 அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளிலும் உள்ள வாக்குச்சாவடிகளை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்திருக்க அறிவுறுத்தியதுடன், வாக்குச்சாவடிகளை அரசு வழிகாட்டுதலின்படி அவ்வப்போது கிருமி நாசினி கொண்டு கிருமி நீக்கம் செய்ய வேண்டும் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>
தற்போது தமிழக சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருப்பதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள போதிய அவகாசம் இல்லாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு இப்பணியின் அவசர அவசியம் கருதி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி 29.03.2021 அன்று பெறப்பட்டுள்ளது.</td>
<td>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
